தமிழ்நாடு தகவல் ஆணையம்
எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 15.04.2025**

**முன்னிலை**

# திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
# மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 13127/SCIC/2023

திரு.டி.செல்வபாஸ்கர் — மேல்முறையீட்டாளர்
எண்.4/10, டி 2 A.C.ஸ்ரீநகர்
இலந்தையடி, கன்னியாகுளம் (அஞ்சல்)
நாகர்கோவில், கன்னியாகுமரி-629 003.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம் … பொது அதிகார அமைப்பு
கன்னியாகுமரி (இ) நாகர்கோவில்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 10/03/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது), நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “1955ஆம் ஆண்டு 1ஆம் புத்தகம் 41-ஆம் வால்யூம் 297 முதல் 308 வரை பக்கங்களில் 1530/1955 ஆவணமாக பதிவு பெற்ற ஆவண நகல்கள் தேவைப்படுகிறது.” என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), கன்னியாகுமரி (இ) நாகர்கோவில் அவர்கள் மனுதாரருக்கு எண்.2770/ஆ1/2023, நாள் 17/04/2023 வாயிலாக தகவல் அனுப்பியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 27/05/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை, அனுப்பியுள்ளார். அதற்குமேல்முறையீட்டு அலுவலர்/ துணைப் பதிவுத்துறைத் தலைவர், திருநெல்வேலி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.4455/ஆ1/2023, நாள் 20/06/2023 வாயிலாக பதில் அனுப்பியுள்ளார்.

3. அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 19/07/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 13127/SCIC/2023 ஆக பதிவு செய்தது. பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), கன்னியாகுமரி (இ) நாகர்கோவில் அவர்கள் க.எண்.2770/ஆ1/2023, நாள் 17/10/2024 வாயிலாக தகவல் அனுப்பியுள்ளதோடு, அதன் விவரத்தை ஆணையத்திற்கும் தெரிவித்துள்ளார். பின்னர், மனுதாரர் 28/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனுவினை அனுப்பியுள்ளார். அனுப்பியுள்ளார்.

4. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 15/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**5. இன்றைய விசாரணைக்கு, மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.எஸ்.ராஜா, மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) (கூ.பொ.) கன்னியாகுமரி (இ) நாகர்கோவில் அவர்கள் ஆஜராகி ஏற்கெனவே மனுதாரருக்கு 17/04/2023, 20/06/2023 மற்றும் 17/10/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 28/12/2024 தேதியிட்டு தனது ஆட்சேபணை மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் அனுப்பிய தகவல்களில் மனுதாரரை கட்டணம் செலுத்தி, நகல்களை பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டிருந்தது. அதற்கு மனுதாரர், தான் முன்னமேயே இனம் 3-க்கு கட்டணம் செலுத்தியதாகவும், ஆனால் தனக்கு, நகல் வழங்கப் பெறவில்லை என்றும் அதனால் இனம் 1, 2 ஆகியவற்றிற்கு கட்டணம் செலுத்தவில்லை என்றும் தெரிவித்தார்.**

**6. எனவே, ஆணையம் மனுதாரரை மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில் அலுவலகத்திற்கு 21/04/2025 அன்று காலை 10.00 மணிக்குச் சென்று இனம் 1, 2-க்கு கட்டணம் செலுத்துமாறும், அந்நடவடிக்கைகளுக்கு பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரும் உதவியை செய்யும்படியும், பின்னர் மனுதாரர் கோரியவாறு இனங்கள் 1,2 மற்றும் 3 (ஏற்கெனவே கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது) நகல்களை வழங்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. அதன் பின்னர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர், கன்னியாகுமரி பதிவு மாவட்டம் அவர்கள், நிறைவேற்றுகை அறிக்கையினை 30/04/2025-க்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**

**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

உதவி பதிவாளர்

## <u>வழக்கு எண். SA 13127/SCIC/2023</u>

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
கன்னியாகுமரி (இ) நாகர்கோவில்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.டி.செல்வபாஸ்கர்
எண்.4/10, டி 2 A.C.ஸ்ரீநகர்
இலந்தையடி, கன்னியாகுளம் (அஞ்சல்)
நாகர்கோவில், கன்னியாகுமரி-629 003.

RG/PC